திருவெறும்பூர் தொகுதியில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி" ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆலோசனை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!

திருச்சி மத்திய - வடக்கு மாவட்ட 'இந்தியா' கூட்டணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருச்சி, நவ. 11 -

இன்று (11ம் தேதி) இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து நடைபெறும் ஆர்ப்பாட்டம் தொடர்பான அனைத்து கட்சி ஆலோசனைக் கூட்டம் திருச்சியில் உள்ள கழக முதன் மைச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட திமுக மற்றும் தோழமைக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் தில்லை நகரில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அலுவலகத்தில் திமுக மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் (எம்.எல்.ஏ.) தலைமையில் மேயர் அன்பழகன் முன்னிலையில் இன்று அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு (SIR) நடைமுறையை கண்டித்து வரும் 11ம் தேதி நடைபெற இருக்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழகம் சார்பில் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு நம்முடைய வலுவான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டுமென ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த கூட்டத்தில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மதிமுக, ஆம் ஆத்மி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட கழகம், மனிதநேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட தோழமைக் கட்சிகள் கலந்து கொண்டனர்.

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டனி கட்சிகளின் சார்பில் இன்று (11.11.2025 -செவ்வாய் கிழமை) சுமார் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகம் முன்பு S.I.R கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நடைபெற விருக்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை மிக சிறப்பாக நடத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பாடுபடுவது என தீர்மானிக்கப்படுகின்றது.

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் S.I.R க்கு தொடக்க முதல் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும் ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், ஏதேச்சதிகார போக்குடனும் செயல்பட்டு வரும் இந்திய தேர்தல் ஆணையத்தை இக் கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

கூட்டத்தில் திருச்சி மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் எல். ரெக்ஸ்,திருச்சி கலை,வக்கீல் கோவிந்தராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் ஸ்ரீதர்,மாநகர் மாவட்ட செயலாளர் வெற்றிச்செல்வன்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்டச் செயலாளர் சிவா,திருச்சி மாநகராட்சி கவுன்சிலர் சுரேஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர்கள் புல்லட் லாரன்ஸ், கனியமுதன்,கலைச்செல்வன், ஆற்றல் அரசு,

மண்டல செயலாளர் தமிழாதன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் வெல்ல மண்டி சோமு, .சேரன்,மனிதநேய மக்கள் கட்சி மேற்கு மாவட்ட தலைவர் கவுன்சிலர் பைஸ் அகமது,மாவட்ட செயலாளர் இப்ராகிம்சா , மனிதநேய ஜனநாயக கட்சி மாநில இளைஞரணி செயலாளர் முகமது ஷெரீப், மாவட்டத் துணைச் செயலாளர் தர்வேஷ் பாஷா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் ஹபீபுர் ரகுமான்,பேராசிரியர் மைதீன்,அகில இந்திய பார்வர்டு பிளாக் மாவட்ட செயலாளர் வெங்கடேசன்,திராவிடர் கழக மாவட்ட தலைவர் ஆரோக்கியராஜ்,ஆதித்தமிழர் பேரவை செங்கை குமுலி,மக்கள் நீதி மய்யம் மேற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார்,மாநகர செயலாளர் சீனிவாசன் உள்பட திமுக கூட்டணி கட்சியை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

நாமக்கல், நவ. 11 –

இன்று (11 ஆம் தேதி) நாமக்கல்லில் தமிழ்நாட்டில் மத்திய ஆளும் பாஜக அரசால் கொண்டுவரப்பட்டுள்ள சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வைக் (S.I.R)கண்டித்து நடக்க உள்ள ஆர்ப்பாட்டம் குறித்து ஆலோசிக்க தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் மற்றும் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் தளபதி அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி கலந்து கொண்டு எஸ்.ஐ.ஆர். என்னும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீரானால் தமிழகத்தில் பீகாரில் நடந்தது போல் வாக்காளர்கள் பெரும்பான்மையான அளவில் நீக்கம் செய்து விட கூடாது. மற்ற மாநிலத்தில் இருந்து வேலை காரணமாக இங்கே வந்தவர்கள் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டு விடக்கூடாது என்பதில் எள்ளளவும் கவனக்குறைவாக இருந்து விடக் கூடாது. நாம் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் கூட செய்கிற பணியில் எவ்வித தொய்வும் இருந்து விடக் கூடாது.

இன்று (11 ஆம் தேதி) நடக்க இருக்கிற ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளாக கலந்து கொள்வதின் மூலம் மத்திய அரசிற்கும், தேர்தல் ஆணையத்திற்கும் நம்முடைய எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என்பதால் அனைவரும் பெரும் திரளாக வந்து ஆர்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு கொமதேக நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் ராயல் செந்தில், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் கே.கே.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் அன்புமணி, நகர செயலாளர் சுகுமார், ஆதித்தமிழர் பேரவை மாநில நிர்வாகி தமிழரசு, மாவட் டச் செயலாளர் சரவணகுமார், வி.சி.க. மாவட்ட செயலாளர் முருகன், தொகுதி பொறுப்பாளர்கள் சீனிவாசன் (திருச்செங்கோடு), செல்வன் (குமாரபாளையம்), உமா (பரமத்திவேலூர்), நகர செயலாளர்கள் ஆர்.நடேசன், தா.கார்த்திகேயன், குமார், ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் தனராசு, வட்டூர் தங்கவேல், தாமரைச்செல்வன், பழனிவேல், தளபதி செல்வம், இளங்கோவன், நாச்சிமுத்து, செல்வராஜ், சாமிநாதன், தளபதி சுப்பிர மணியம், சரவணன் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் திருமலை, ரமேஷ்பாபு, முருகன், கார்த்திக்ராஜ், ராமமூர்த்தி, பெருமாள், கருணாநிதி, ராமலிங்கம் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி மறைவிற்கும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கதிரவனின் தாயார் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் மத்திய ஆளும் பாஜக அரசால் கொண்டு வரப்பட்ட சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு எஸ்.ஐ.ஆர்.ஐ.யை எதிர்த்து இன்று (11 ஆம் தேதி) காலை 10 மணிக்கு நாமக்கல்லில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பில் சிறப்பான முறையில் பெரும் திரளாக கலந்து கொள்வது,

நவம்பர் 27 ஆம் தேதி தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடும் விதமாக அன்று அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம், இனிப்பு வழங்குவது மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மா னங்கள் நிறைவேற்றப் பட்டது.

சேலம் மாவட்டம் அயோத்தியாப் பட்டணம் வடக்கு ஒன்றியம் வீராணம் ஊராட்சியில் ரூ.3 கோடியே 50 லட்சம் மதிப்பில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணியினை வடக்கு ஒன்றிய செயலாளர் க.ரத்தினவேல் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் பா. கௌதமன் ,துணைச்செயலாளர் செந்தில் பொருளாளர் பழனிவேல், மாவட்ட பிரதிநிதி அகரம் ராஜேந்திரன், ராஜா மற்றும் கிளை செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. அவர்களின் அறிவுரைப்படி தருமபுரி மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் கவிதா மோகன்தாஸ் அரூர் சட்டமன்றத் தொகுதி கம்பைநல்லூர் பகுதி பூத் 29ல் இல்லம்தோறும் சென்று SIR திருத்தம் குறித்து விளக்கி படிவங்களை வழங்கினார்.உடன் சுப்புராஜ்,ராஜசேகர், சுமதி உள்ளிட்ட தி.மு.க.வினர் பங்கேற்றனர்.

முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில், பூவிருந்தவல்லியில் நடைபெற்று வரும் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களின் சிலை வடிவமைக்கும் பணிகளை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக – இன்று

தருமபுரியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. – முனைவர்.பி.பழனியப்பன் கூட்டறிக்கை!

தருமபுரி, நவ. 11 -

தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி., மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மதசார்பற்ற தலைமையிலான முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்களின் அறிக்கையின்படி தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் நடைபெறும் S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு S.I.R கொண்டு வந்துள்ளதை கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில்

"மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் தலைமையில், இன்று (11.11.2025 - செவ்வாய்க்கிழமை) ,காலை 10.00 மணியளவில், தருமபுரி நகரம், BSNL அலுவலகம் அருகில் நடைபெற உள்ளது.

அதுசமயம் இக்கண்டன ஆர்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தோழமை கட்சி நிர்வாகிகள்,கழகவழக்கறிஞர்கள், கழக உறுப்பினர்கள், விவசாயிகள், வியாபாரிகள், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

ஆ.இராசா.எம்.பி. பங்கேற்பு! எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக

பெரம்பலூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், நவ. 11 -

பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா வழிகாட்டுதல்படி, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனையின் பேரில், இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு மேற்கொண்டு வந்துள்ளது. சிறுபான்மையினர் வாக்குகள், பட்டியலின மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதித்திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு தனக்கும் பாதுகாவலனாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை செய்திட முயன்றிருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் கலையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர்(SIR) திட்டத்தை செயல்படுத்தி மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது. சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR)ன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்கள் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடு கிறது.

zஎனவே இந்த எஸ்.ஐ.ஆர் சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும் படி தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செயல்படுத்தாத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவாக மாறியதை எதேச்சதிகாரப்போக்கில் இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு எஸ் ஐ ஆர் கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நவம்பர் 11 ஆம் தேதி, இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் காந்தி சிலை அருகில் மாபெரும் கன்டண ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இந்த மாபெரும் கன்டண ஆர்ப்பாட்டத்தில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,

மன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள்கள், கழக தோழர்கள் மற்றும் தோழமைக்கட்சியினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

எழும்பூர் தெற்குப் பகுதி – வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.விஜய் தந்தை

மாவட்டக் கழகப் பிரதிநிதி எம்.ரமேஷ் மறைவு!

கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, நவ.11-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.விஜய் தந்தையும், 108 'அ' வட்டம் - மாவட்டப் பிரதிநிதியுமான எம். ரமேஷ் (வயது 56) நேற்று முன்தினம் (9.11.2025-ஞாயிறு) அதிகாலை 5.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் எண். 9/5, மங்காபுரம் 11வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை-31 எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நேற்று (10.11.2025-திங்கள்) மதியம் 2 மணியளவில் புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பொள்ளாச்சி ஐக்கிய ஜமாத் , முஸ்லீம் மகளிர் சங்கம் மற்றும் பொள்ளாச்சி ஷாஃபி மஸ்ஜித் இணைந்து நடத்தும் இஸ்லாமிய பெண்களுக்கான தமிழ்நாடு அரசு நிதியுதவி வழங்கும் விழா முன்னாள் அரசு வழக்கறிஞரும்,ஐக்கிய ஜமாத் தலைவருமான ஹாஜி என். ஷாநவாஸ்கான் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியல் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி பெண்களுக்கு நிதியுதவி வழங்கினார்.